அரசாங்க நிருவாகச் சுற்றுநிருப இல. 197(11).

எனது இல. 543 ஈ 708 டி.
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1982, மார்ச்சு மாதம் **26** ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

சம்பள மீளாய்வுக் குழுவின் விதப்புரைகளைச் செயற்படுத்தல். - 1981.12.29ஆந் தேதிய 197ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்திற்குத் திருத்தம்.

---

01. 1ஆம் அனுபந்தத்தில்,

(அ) "ஆரம்ப மன்று நீதிபதிகள் .. .. .. 17:01"
என்பதை நீக்கி "ஆரம்ப மன்று நீதிபதிகள்.. .. .. 22"
என்பதைச் சேர்க்க.

(ஆ) "பொதுத் தரங்களின்" கீழ்:
"111ஆம் வகுப்பு .. .. .. 01:02"
என்பதை நீக்கி "வகுப்பு 111 .. .. .. 01:01"
என்பதைச் சேர்க்க.

(இ) "மோட்டார் வண்டிகள் துப்புரவாக்குபவர்.. .. .. 01:03"
என்பதை நீக்கி "மோட்டார் வண்டிகள் துப்புரவாக்குபவர் .. .. .. 01:04"
என்பதைச் சேர்க்க.

02. வேதனத்திட்டம் 01:02, உத்தியோகச் சம்பளத் திட்டத்தை அனுபவிக்கும் தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக்குப் பொருந்தும். (புதிய வகுப்பு 111) (1ஆம் அனுபந்தத்தைப் பார்க்க)

03. 111ஆம் அனுபந்தத்திற் காட்டப்பட்ட "உத்தேசிக்கப்பட்ட அனைத்தும் உள்ளடக்கப்பட்ட சம்பளத்"தின் கீழ் உள்ள நாளாந்தச் சம்பள வீதங்கள், அனைத்தும் உள்ளடக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட சம்பளமாக நாளொன்றிற்கு 30 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும் பணியாளர்கள் தரங்களுக்கு மட்டும் ஐந்திலொரு பங்கினால் 1982.01.01ஆந் தேதி தொடக்கம் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

04. நாளாந்த சம்பள வீதங்களைச் செயற்படுத்துவதில்

(அ) ஐந்து நாட்கள் ஆறு நாட்கள் அல்லது ஏழு நாட்கள் வேலை செய்யும் பணியாளர்களுக்கிடையேயும்

(ஆ) ஆண், பெண் பணியாளர்களுக்கிடையேயும்

(இ) கமத்தொழிற்துறை, வெளிக்களப் பணியாளர்களுக்கிடையேயும் எந்திர, தொழிற்சாலைப் பணியாளர்களுக்கிடையேயும்

(ஈ) கொழும்பிலும் ஏனைய வெளியிடங்களிலும் வேலை செய்யும் பணியாளர்களுக்கிடையேயும்

வேறுபாடு எதும் இருக்கமாட்டாது.

05. 1982.01.01ஆந் தேதி தொடக்கம் தொடக்க வேதனமாக ஆண்டொன்றிற்கு 13,800/- ரூபாவையும் அதற்கு மேலேயும், வருடாந்த வேதனவேற்றமாக 480ரூபாவும் அதற்கு மேலேயும் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் பதவிநிலை உத்தியோகத்தராவர்.

ஒப்பமிட்டவர்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.